## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியான இலங்கை சீமெந்துக் கம்பனி - 2013

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியான இலங்கை சீமெந்துக் கம்பனியினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை தீர்மானிக்க என்னால் முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

#### மறுப்பு அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினது துணைக் கம்பனியான இலங்கை சீமெந்துக் கம்பனியினதும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**மறுப்பு அபிப்பிராயம் - கூட்டுத்தாபனம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள்**

இலங்கை தேசிய சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான வ/ப அரசாங்க சீமெந்துக் கம்பனியின் பங்குகளில் 62.45 சதவீதம் உரித்தாக இருப்பதால் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**2.2.2. நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குதல்**

சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் மூலதனம் ரூபா 967 மில்லியனாக இருந்ததுடன், திரட்டிய நட்டம் ரூபா 67 மில்லியனாக இருந்தது. கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டிற்கு தாக்கமொன்று இல்லாமல் இருந்த போதிலும், வ/ப அரசாங்க சீமெந்துக் கம்பனி தொடர்ச்சியாக நட்டமடைந்திருப்பதால் ஒன்றிணைந்த உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் மூலதனம் ரூபா 2,702 மில்லியனாக இருந்ததுடன், ரூபா 2,238.7 மில்லியனான திரண்ட நட்டத்தை பெற்றிருந்தது. அதன் பிரகாரம் மூலதனத்தின் 82.8 சதவீதம் குறைவடைந்திருப்பதும் அதனால் வ/ப சீமெந்துக் கம்பனியுடன் ஒன்றிணைந்த கணக்குகளைப் பரீட்சிக்கும் போது தொடர்ந்தும் நடாத்திச்செல்லல் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமையொன்று ஏற்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

**2.2.3 ஒரே செயற்பாட்டிற்காக இரண்டு நிறுவனங்களும் நடாத்திச் செல்லல்**

வ/ப இலங்கை சீமெந்துக் கம்பனி சீமெந்தினை இறக்குமதி செய்து உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்வதே பிரதான பணியாக இருந்த போதிலும், இரண்டு நிறுவனங்களும் ஒரே செயற்பாட்டையே மேற்கொள்வது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபை இக்கம்பனியினது நிர்வாக சபையாக செயற்படுகின்றது.

**2.2.4 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 (LKAS16)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தற்போது பயன்படுத்தப்படுகின்ற பெறுமதி முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 3,929,169 கிரயத்திலான இரண்டு மோட்டார் வாகனங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொத்தொன்று பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைமைக்கு உட்பட்ட திகதியிலிருந்து அச்சொத்து முறையான அடிப்படையொன்றில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 927,898 கூட்டுத்தொகையான மூன்று வகைகளுக்குரிய சொத்துக்கள் தொடர்பாக பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்கீட்டுக் கொள்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 11,884,804 கூட்டுத்தொகையான வரவு மீதிகள் மற்றும் ரூபா 12,435,964 கூட்டுத்தொகையான செலவு மீதிகளுக்காகவும், 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 76,680,411 கூட்டுத்தொகையான வரவு மீதிகள் மற்றும் ரூபா 76,362,683 கூட்டுத்தொகையான செலவு மீதிகளுக்காகவும், 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக ரூபா 40,853,368 கூட்டுத்தொகையான வரவு மீதிகளுக்காகவும் மற்றும் ரூபா 40,884,747 கூட்டுத்தொகையான செலவு மீதிகளுக்காகவும் 2013 இன் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அவ்வாறான நிலைமையொன்று எதிர்காலத்தில் ஏற்படமாட்டாதென கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதுள்ளது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குரிய கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள காணி வங்கி மேலதிகப்பற்று வசதியினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ரூபா 172 மில்லியன் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அரச வங்கியொன்றில் பிணையாக வைக்கப்பட்டுள்ளதாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 8.2 ஆம் இலக்க குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அக்காணி 99 வருட குத்தகை முறைமையின் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவருக்கு ஒப்படைப்பதற்கு அமைச்சரவை நியமித்த மீளாய்வுக் குழு மூலம் முன்மொழியப்பட்டிருந்ததாக 2.07(ஆ) ஆம் இலக்க குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அம்மும்மொழிவினை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) புத்தளத்தில் அமைந்துள்ள அருவக்காலுவில் 5,352 ஏக்கர் சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைந்துள்ள காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 1964 இன் 14012 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 8.2 ஆம் குறிப்பின் கீழ் காங்கேசந்துறையில் அமைந்துள்ள 751 ஏக்கர் அளவிலான சுண்ணாம்புக்கல் சுரங்கம், தொழிற்சாலை மற்றும் கட்டிடத்தொகுதி கூட்டுத்தாபனத்திற்குரியதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதில் 104 ஏக்கர் இலங்கை சீமெந்துக் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அதிலிருந்து இதுவரை வாடகை வருமானமொன்று கிடைத்திருக்கவில்லை.

(iii) புத்தளத்தில் அமைந்துள்ள கல்லடியிலுள்ள அட்டவில்லு காட்டில் (Atta Villu) அமைந்துள்ள 221 ஏக்கர் 03 ரூட் 27.8 பேர்ச் இலிருந்து 69 ஏக்கரின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) நீண்டகால குத்தகை அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக உள்ளதாக கடிதங்கள், ஆவணங்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டுள்ள மன்னார் மாவட்டத்தின் புளியடி இறக்கத்தில் (Puliyadi Irakkam) அமைந்துள்ள 604 ஏக்கருடன் கூடிய களி மற்றும் சுண்ணாம்புக்கல் சுரங்கத்துடன் கூடிய 1191 ஏக்கர் அளவான காணி தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 கணக்காய்விற்கான சான்றின்மை

கூட்டுத்தாபனத்திற்குரிய காணி மற்றும் கட்டடிங்கள் என்னவென்பது தொடர்பாக சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 111,576,652 கூட்டுத்தொகையான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் ரூபா 37,705,069 கூட்டுத்தொகையான நடைமுறைப்பொறுப்புக்கள் என்பவற்றிற்கான பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வியாபார பொறுப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 85,224,411 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 11,712,123 கூட்டுத்தொகையான மீதிகள் 1 – 2 ஆண்டுகளிற்கு இடையிலும், ரூபா 14,434,353 கூட்டுத்தொகையான மீதிகள் 2 – 3 ஆண்டுகளிற்கு இடையிலும், ரூபா 30,846,822 கூட்டுத்தொகையான மீதிகள் 3 ஆண்டுகளிற்கு மேல் பழமையான மீதிகளாகவும் இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 89,809,582 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 19,855,327 கூட்டுத்தொகையான மீதிகள் 1 – 2 ஆண்டுகளிற்கு இடையிலும், ரூபா 2,985,059 கூட்டுத்தொகையான மீதிகள் 2 – 3 ஆண்டுகளிற்கு இடையிலும், ரூபா 54,718,680 கூட்டுத்தொகையான மீதிகள் 3 ஆண்டுகளிற்கு மேல் பழமையான மீதிகளாகவும் இருந்தன.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 756 | நிதியாண்டு முடிவடைந்த உடனேயே சொத்துக்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொண்டு அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 779,485,898 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி, கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் என்பவற்றிற்காக வேறாக பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 4.2.2 ஆம் பிரிவு | கூட்டுத்திட்டம், பாதீடு மற்றும் செயலாற்றல் என்பன காலரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 8.3.8 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் அமைச்சரவையின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 75,000 தொகை நன்கொடை மற்றும் உதவிகளாக வழங்கப்பட்டிருந்தன. |
| (iii) | 8.3.9 ஆம் பிரிவு | அரச கூட்டுத்தாபனங்கள், சபைகளின் வளங்கள் என்பவற்றை வரிசை அமைச்சின் நடவடிக்கைகளுக்காக வழங்கக் கூடாத போதிலும், 2011 சனவரி மாதத்தில் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 4.8 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட கெப் வண்டி கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் கணக்காய்வு திகதி வரையில் வரிசை அமைச்சின் பாதுகாப்பு கடமைகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரி அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு | உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 4,641,762 ஆன தேசத்தை கட்டியெழுப்புதல் வரித்தொகை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 2.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 9,147,692 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் மீதான வரித் தொகை அனுப்பிவைக்கப் படாதிருந்ததுடன், ரூபா 8,725,533 கூட்டுத் தொகையான மீளளிக்ககூடிய பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்குச் செலுத்த வேண்டிய வரியிலிருந்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1990 இன் 6 ஆம் இலக்க மேல் மாகாண நிதி ஒழுங்குவிதிகளின் 3 ஆம் பிரிவு | மேல் மாகாண வருமான வரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 7,101,932 கூட்டுத்தொகையான வியாபாரப் புரள்வு வரி அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க மற்றும் DMA/2009/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | இச்சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளால் கூட்டுத்தாபனம் ரூபா 424,603,476 தொகையான பற்றாக்குறையொன்றை அடைந்திருந்ததுடன் அதனையொத்த முன்னைய ஆண்டில் அடைந்திருந்த பற்றாக்குறை ரூபா 75,099,975 ஆக காணப்பட்டது. இதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 349,503,501 ஆல் அதிகரித்தமை காரணமாக அதே அளவினால் செயற்பாட்டு விளைவுகள் குறைவடைந்திருந்ததுடன், அதற்கு இலங்கை சீமெந்துக் கம்பனியில் முதலீடு செய்யப்பட்டிருந்த பங்குகளின் தற்போதய சந்தைப் பெறுமதி குறைவடைந்தமை அடிப்படையில் ஏற்பட்ட ரூபா 411,775,186 தொகையான நிதி நட்டம் மற்றும் விற்பனை வருமானம் ரூபா 77,419,150 ஆல் அல்லது 21 சதவீதத்தால் குறைவடைந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 21,700 மெற்றிக் தொன் சீமெந்து அல்லது 434,000 சீமெந்து பைகளும் முன்னைய ஆண்டில் 28,249 மெற்றிக் தொன் சீமெந்து அல்லது 564,980 பைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சீமெந்து இறக்குமதியில் 33 சதவீத குறைவொன்றைக் காண்பித்தது.

(ஆ) காங்கேசன்துறை சீமெந்துகொங்ரீட் உற்பத்தி மற்றும் விற்பனைப் பிரிவின் மொத்த வருமானத்தைக் காட்டிலும் செலவினங்களை செய்யவேண்டி ஏற்பட்டிருந்ததன் காரணமாக தொடர்ச்சியாக நட்டமீட்டியிருந்ததுடன் முன்னைய ஏழு ஆண்டுகளில் ஈட்டியிருந்த நட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | வருமானம் | செலவினம் | நட்டம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா் | ரூபா |
| 2007 | 1,537,141 | 21,063,774 | (19,526,633) |
| 2008 | 17,916,478 | 24,782,357 | (6,865,879) |
| 2009 | 36,893,564 | 43,994,616 | (7,101,052) |
| 2010 | 27,334,174 | 27,364,472 | (30,298) |
| 2011 | 6,860,513 | 16,283,680 | (9,423,167) |
| 2012 | 32,456,800 | 38,120,118 | (5,663,318) |
| 2013 | 4,491,387 | 19,274,456 | (14,783,069) |

(இ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, இலக்கிடப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு கூட்டுத்தாபனத்தினால் போதியளவு கவனம் செலுத்தப்படாமல் இருந்ததுடன், எந்தவொரு மாதத்திலும் இலக்கிடப்பட்ட விற்பனையில் 25 சதவீதத்தை விட பெற்றுக்கொள்வதற்கு தவறியிருந்தது. மீளாய்வாண்டின் செப்தெம்பர், ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் விற்பனைகளின் செயன்முன்னேற்றம் மிகவும் பலவீனமாக இருந்ததுடன், 10 சதவீதத்திற்கு மேற்பட முடியாமல் இருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட விற்பனைகளிலிருந்து 16.5 சதவீதமே அடையப் பெற்றிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலை அதிகரிக்கும் நோக்குடன் 2013 ஆம் ஆண்டில் மாதமொன்றிற்கு 400 சீமெந்து கொள்கலன்களை இறக்குமதி செய்வதற்கும், கொள்ளுப்பிட்டியில் காணப்படும் காணியில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கும், காங்கேசன்துறையில் சீமெந்துக் கம்பங்களின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும், காங்கேசன்துறையில் புதிய சீமெந்துப் பொதியிடல் தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்குகளில் எதனையும் அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை முடியாமல் போயிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் அடிப்படையில் சீமெந்தினை விற்பனை செய்வதற்காக விற்பனை முகவர் பதவிகளை வழங்குகையில் கடனிற்கு வழங்கப்படும் பெறுமதிக்குச் சமமான தொகைக்கு பிணைமுறியொன்றைப் பெற்றுக்கொள்ளாமை, கடன் வழங்கக்கூடிய உச்ச எல்லை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்காமை, கடன் செலுத்தத் தவறுபவர்களிடமிருந்து கடனை அறவிடுவதற்கான முறையினை உடன்படிக்கையில் உள்ளடக்கியிருக்காமை, கடனைச் செலுத்துவதற்கு தவறியிருக்கையிலும் மீண்டும் மீண்டும் கடன் வழங்கப்பட்டிருந்தமை, வங்கிப் பிணைக்காக பொய்யான

தகவல்களை வழங்கியிருந்தமை, முறையற்ற விதத்தில் கடன்களை அங்கீகரித்திருந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமை மற்றும் அறவிடப்பட வேண்டிய கடன் தொகை தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை போன்ற முகாமைத்துவச் செயற்திறனின்மைகள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட முடியாதிருந்த கடன்களின் மொத்த மீதி ரூபா 61,028,486 ஆக இருந்தது.

(ஆ) சீமெந்து இறக்குமதி செய்வதற்குரித்தாக செலவிடப்பட்ட கிரயம், நிர்வாக விநியோகம் மற்றும் நிதிச் செலவினம் என்பவற்றை சீராக்கியதன் பின்னர் ஏற்பட்ட மொத்தக் கிரயத்தை, விற்பனை வருமானத்திலிருந்து ஈடுசெய்வதற்கு முடியாதிருந்தமை அது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தாமையேயாகும். இவ்வாறான நிலைமையொன்றின் கீழ் தொடர்ந்தும் நட்டமடைவதால் சிமெந்து இறக்குமதி செய்வதால் கூட்டுத்தாபனத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு / ஸ்திரதன்மைக்கு சவலாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் 2004 ஆம் ஆண்டிலிருந்து தனியார் நிறுவனமொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,400,000 தொகையும் 16 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனியில் ரூபா 1,083,618,910 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு வரையிலும் எவ்வித பிரதிபலனும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 1990 ஆம் ஆண்டில் சீமெந்துக்உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருளான ''கிளின்கர்'' இறக்குமதி செய்வதற்காக ஐக்கிய அமெரிக்க குடியரசில் அமைந்துள்ள நிறுவனமான வ/ப ஐடால் பல்தேசியக் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் செயற்படாமையால் குறித்த கம்பனிக்கு 1.3 மில்லியன் ஐ.அ.டொ இழப்பீட்டைச் செலுத்த நேர்ந்திருந்தது. அதில் ஒரு மில்லியன் ஐ.அ.டொலரை புத்தளம் சீமெந்துக் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகை 2012 நவம்பர் 01 ஆம் திகதிய அமப/12/1458/553/019 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 0.3 மில்லியன் ஐ.அ.டொலர்களை கூட்டுத்தாபனத்தால் கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 38,704,668 தொகைக்கு வங்கி கடன் பெற்றுக்கொண்டு முன்னைய ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அவ்வங்கிக் கடனுக்காக ரூபா 6,152,681 தொகை வட்டியாக செலுத்த நேர்ந்திருந்தது.

### 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய பங்களிப்புத் தொகையை உரிய நேரத்தில் செலுத்துவதற்கு தவறியமையால் மீளாய்வாண்டில் ரூபா 6,169 தொகை மிகை அறவீடாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 434,000 சீமெந்து பைகளில் 7,679 பைகள் மற்றும் 189 பைகள் பழுதடைந்தமையாலும் காணாமல் போனமையாலும் ரூபா 258,576 தொகை நட்டமடைந்திருந்ததுடன், அதனை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 அம் ஆண்டின் கொள்கலன் இயந்திரமொன்றையும் அதற்குரிய உப பாகங்களையும் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 577,429 தொகையும் ரூபா 27,429 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன், கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் இந்த இயந்திரம் எவ்விதப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக புத்தளம், பாலாவி மற்றும் கல்லடி பிரதேசங்களில் காணப்பட்ட ஏறத்தாழ 152 ஏக்கர் காணி பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. அதில் 09 ஏக்கர் காணி பாதுகாப்பற்றும் பயன்படுத்தப்படாமலும் புதர்கள் சூழ்ந்து காணப்பட்டமையால் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் வீடுகளை நிர்மாணித்து குடியேறியிருந்தனர்.

(இ) அதி பாதுகாப்பு வலயத்தில் இராணுவத்தின் பொறுப்பில் காணப்படும் கூட்டுத்தாபனத்திற்குரிய காங்கேசந்துறையில் அமைந்துள்ள 751 ஏக்கர் காணி மற்றும் தொழிற்சாலையுடன் கூடிய கட்டிடத்தொகுதி மற்றும் மன்னார் முருங்கனில் அமைந்துள்ள 211 ஏக்கர் காணி என்பன நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 76 உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்ததுடன், உள்ளவாறான பதவியணி 63 ஆக இருந்தமையால் 13 வெற்றிடங்கள் காணப்பட்டன.

**4.8 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்**

(அ) கூட்டுத்தாபனத்தில் சேவை புரிந்த பொறியியலாளர் சம்பளத்தை மீள்நிரப்பல் அடிப்படையில் தேசிய இயந்திர உபகரண நிறுவகத்திற்கும் அலுவலக உதவியாளர் ஒருவர் 2013 மார்ச் 12 ஆம் திகதி முதல் ஜனாதிபதி செயலகத்திற்கும் விடுவிக்கப்பட்டிருந்தனர். 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறியியலாளரின் சம்பளத்திற்காக ரூபா 654,819 தொகை கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன், அத்தொகை உட்பட மீளாய்வாண்டில் இரண்டு உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகள் என்பவற்றை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2011 நவம்பர் 17 ஆம் திகதி எம்எஸ்டீ 30 சுற்றறிக்கையின் பிரகாரம் அடிப்படை தகைமைகளை கொண்டிராத நபர் ஒருவர் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டு அவருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 464,607 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட விற்பனை வருமானம் ரூபா 3,750,000,000 ஆக இருந்ததுடன், உள்ளவாறான வருமானம் ரூபா 307,462,755 ஆக இருந்தது. அதன் பிரகாரம் செயன்முன்னேற்றம் இலக்கிடப்பட்ட வருமானத்தில் 8.2 சதவீதமாக மாத்திரம் இருந்தது.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2013 ஆம் ஆண்டின் பாதீட்டில் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களை ஒப்பீடு செய்த போது 26 சதவீதம் முதல் 231 சதவீதத்திற்கிடைப்பட்ட முரண் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.4 தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

இலங்கை சீமெந்துகூட்டுத்தாபனத்தினால் அருவக்காலுவில் அமைந்துள்ள 5,352 ஏக்கர் சுண்ணாம்புக்கல் சுரங்கம் 1995 ஆம் ஆண்டில் சீமெந்தினை உற்பத்தி செய்வதற்கான சுண்ணாம்புக் கற்களை அகழ்ந்தெடுப்பதற்காக ஹொல்சீம் லங்கா தனியார் கம்பனிக்கு 50 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் படி, வாடகை ஆண்டிற்கு ரூபா 26,516,620 ஆக இருந்ததுடன், 50 ஆண்டுகளின் போதும் வாடகையினை திருத்தும் சந்தர்ப்பம் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. ஆதலால் 2011 ஆகஸ்ட் 16 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது சுண்ணாம்புக்கல் சுரங்க குத்தகை உடன்படிக்கையினை மீளத் திருத்தியமைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிதிக் கட்டுப்பாடு
(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கடன்கள்
(இ) நிலையான சொத்துக்கள்
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு